# மான்




உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com

# மான்

அரிணம, சாரங்கம், நல்லி, உழை, பிணை, குணம், மறி, ஏணம், குரங்கம், கலை, சுணம், இரலை, மலர, என எல்லாப் பெயர்களுக்கும் சொந்தக்காரர். ஓர் அழகான விலங்கு. அதற்கு நான்கு கால்கள், இரண்டு கொம்புகள், துள்ளிக் குதித்து ஓடும் அழகே தனி. என் பேனா மான் என்று எழுதும் முன்னே உங்கள் இதழ் மான் என்று சொல்லியிருக்கும் சரி தானே?



மான் பாலூட்டி வகையைச் சார்ந்த விலங்கினம். இதன் அறிவியல் பெயர் செர்விடி (Cervidae) என்பதாகும். ஆண் மான் - கலை, பெண் மான் - பிணை மற்றும் குட்டியை - மறி என்று அழைப்பர். ஆஸ்திரேலியா, அண்டார்டிக்கா நாடுகளைத் தவிர பிற நாடுகளில் மான்கள் காணப்படுகின்றன. மான் என்றவுடன் அதன் கொம்புகள் தான் நம் நினைவில் வரும் அல்லவா? மானின் கொம்புகள் 'கெரட்டின்' என்ற வேதிப்பொருளால் ஆனது. கொம்புகள் தனி உறுப்பாகத் தோன்றும். ஆனால் அவை கொம்புகள் அல்ல எலும்புகளின் நீட்சியாகும். தலையின் எழும்புகள் வெளியே நீண்டு வளரும் ஒரே விலங்கு மான். கொம்புகள் இரண்டு அல்லது மூன்று கிளைகளை உடையது. ஓராண்டிற்கு ஒருமுறை கொம்புகள் உதிர்ந்து முளைக்கும். முதலாண்டில் கிளைகள் இல்லாமலும் அதன் பிறகு ஆண்டுதோறும் கிளைகள் தோன்றும். வயது அதிகரிக்க, அதிகரிக்க கிளைகள் அதிகரிக்கும்.



'ப்ரோங் ஹார்ன்' என்ற மானுக்குப் பழைய கொம்புகள் இருக்கும் போதே அதன் கீழிருந்து புதிய கொம்புகள் முளைக்கத் தொடங்கும். ஆனால் பழைய கொம்பு விழுந்த பின்னே புதிய கொம்பு வளர்ந்து வெளியில் தெரியும். 'லெஸர் குடு' என்ற மானின் கொம்புகள் இரண்டு பக்கமும் ஒரே மாதிரி முறுக்கிய அமைப்புடன் காணப்படும். 'சேபில்' மானின் கொம்புகள் வட்ட வடிவமாகக் காணப்படுகிறது. பொதுவாக ஆண் மான்களுக்கு மட்டுமே கொம்புகள் இருக்கும். ஆனால் கொம்புகள் இல்லாத மான் பனிமான்.

மான் தனது கொம்புகளைத் தற்காப்புக்காகப் பயன்படுத்துகிறது. சில சமயம் இனப்பெருக்கத்திற்காகவும் தனது எல்லையை காத்துக்கொள்ளவும், கடுமையான முறையில் சண்டையிடுகின்றன.



இச்சண்டையின் போது கொம்புகள் முறிந்து விடும். அல்லது ஒன்றுடன் ஒன்று சிக்கிக் கொண்டு பிரித்துக் கொள்ள முடியாமல் சண்டையிட்ட இரண்டு மான்களும் ஒன்றாகவே சுற்றித்திரியும். இதனால் நீர் மற்றும் உணவு உண்ண முடியாமல் இறக்கும் அபாயம் ஏற்படும். பொதுவாக மான்கள் வேகமாக ஓடும் பண்பினைக் கொண்ட விலங்கு. இதன் கால்கள் பட்டையாகவும் இருக்கும். மானின் கால்கள் இரட்டைப்படைக் குளம்பி உடையது. மான்கள் தாவர உண்ணி வகையைச் சார்ந்த விலங்கு. தாவரங்களை உண்ணுவதற்கு ஏதுவாக கூர்மையானப் பற்களைக் கொண்டுள்ளது.



மான்கள் தன் உணவாக இலை, தழை, புல், பழம், ஆகியவற்றை உட்கொள்கின்றன. உணவினை (ஆடு, மாடுகளைப் போல அசைபோட்டு செரிக்கும்) இரண்டு விதமான முறையில் செரிக்கும். மான்கள் உணர்மிசை ரோமம் கொண்ட விலங்கு. மானின் சூல்காலம் ஒவ்வொரு மான் வகைகளுக்கிடையே வேறுபடும். குறைந்தது மூன்று மாதம் அதிகமாக ஒன்பது மாதமாகும். ஒன்று அல்லது இரண்டு குட்டிகளை ஈனும். குட்டியினைத் தாய் இரண்டு ஆண்டுகள் காக்கும்.

மான்களைப் பிற விலங்குகளிடமிருந்து தனித்துக் காட்டுவதில் ஒன்று அதன் இடப்பெயர்வு பண்பாகும். இடப்பெயர்வு என்பது காலநிலை, உணவு மற்றும் இனப்பெருக்கம் இவைகளுக்காக ஓரிடமிட்டு வேரிடம் செல்வதைக் குறிக்கும். இடப்பெயர்வு ஒரு வகை உயிர் காக்கும் உத்தியாகும். சில சமயம் காயம், முதுமை காரணமாக இடப்பெயர்வு மேற்கொள்ள முடியவில்லையெனில் அது தற்கொலைக்குச் சமம். தனக்கு வரும் ஆபத்தைத் தன் இனத்திற்குத் தெரிவிக்கத் தரையில் இரண்டு முறை அடித்துச் சத்தம் எழுப்பும். சிங்கம், புலி, சிறுத்தை, செந்நாய் மற்றும் பிற விலங்குகள் மானின் கொன்றுண்ணிகளாகும். மான்கள் சமவெளி, இலையுதிர் காடுகள், புதர் காடுகள், புல்வெளி, சதுப்புநிலம் மற்றும் பாலைவனம் என அனைத்துப் பகுதிகளிலும் வாழ்கின்றன. இனி மானின் வகைகளைப் பற்றி அறிவோம்.

கடமான், கஸ்தூரிமான், புள்ளிமான், நீலான்மான், ஜினஸ் டெட்ரா செரோஸ், சதுப்பு நிலமான், ஆப்பிரிக்கச் சிறுமான் என்று பல வகைகள் உண்டு. உலகிலே மிகப்பெரிய மானினம் மூஸ். இதனை ‘எல்க்’ என்றும் அழைப்பர்.

## கடமான்



கட மானினை கடமா, கடம்பை என்றழைப்பர். மேலும் நாஞ்சில் நாட்டில் ‘மிளா’ என்றும் இலங்கையில் ‘மரை’ என்றும் அழைப்பர். தெற்கு ஆசியாவில் மிகப் பெரிய மானினம் கடமானாகும். இதன் உயரம் 100 முதல் 120 செ.மீ. கொம்பின் நீளம் 30 முதல் 40 செ.மீ. நன்கு வளர்ந்த கடமானின் எடை 225 முதல் 320 கிலோகிராம் இருக்கும். மிகுந்த செவிக் கூர்மையும், நுகரும் தன்மையும் உடையது. கடமானின் கொம்பில் மிக மிக மெதுமெதுப்பான தோல் போன்ற அமைப்பு உள்ளது. இதில் இரத்த ஓட்டம் உள்ளதால் சிறு காயம் பட்டவுடன் இரத்தம் வந்துவிடும். ஆகையால் கொம்பு முழு வளர்ச்சியடையும் வரை கவனமாக இருக்கும். இதன் கழுத்து மற்றும் பிடரியில் தடித்த மயிர் இருக்கும்.

ஆண்மான் 46 சதுர கிலோ மீட்டரும் பெண்மான் 26 சதுர கிலோ மீட்டரும் தன் உணவுக்காக சுற்றித் திரியும். நீர்நிலையின் அருகில் வாழ்வதால் அதிகமாக நீர் அருந்தும். விடியற்காலையிலே மேய்ச்சலுக்குச் செல்லும். இலை, புல், பழங்களை உண்ணும். அக்டோபர், டிசம்பர் மாதங்களில் இனப்பெருக்கத்தில் ஈடுபடும். இக்காலங்களில் மட்டும் ஆண் தன் எல்லையாக 4 சதுர கிலோ மீட்டர் வகுத்துக் கொள்ளும்.

இம்மான் ஒன்பது மாதம் சூல் கொண்டு இரண்டு குட்டிகளை ஈனும். இரண்டு ஆண்டுகள், குட்டியைத் தாய் பாதுகாக்கும். குழுவாக வாழும். முதிர்ந்த பெண் மானே குழுவை வழி நடத்தும். இம்மானினை ஈரமான இலையுதிர்க்காடு மற்றும் பசுமை மாறாக்காட்டுப் பகுதியில் காணலாம். இதன் ஆயுட்காலம் பத்து ஆண்டுகளாகும்.



## நாற்கொம்பு மான்

ஜினஸ் டெட்ரா செரோஸ் என்ற மான் போசிலாபினி குடும்பத்தைச் சார்ந்தது. இம்மானினை நாற்கொம்புமான் அல்லது சௌசிங்கா என்று அழைப்பர். சௌசிங்கா என்பதின் பொருள் நான்கு கொம்புகள். நான்கு கொம்புகளை உடைய ஒரே உயிரினம் நாற்கொம்பு மான் தான். தலையில் இரண்டும், நெற்றியில் இரண்டும் இருக்கும். இதன் பின்புற கொம்பு பெரியதாகவும், முன்புற கொம்பு சிறியதாகவும் இருக்கும். இம்மானின் உயரம் 55 செ.மீ. எடை 20 முதல் 22 கிலோ. மழைக்காலமான ஜூலை முதல் செப்டம்பர் வரை இனப்பெருக்கத்தில் ஈடுபடும். சூல்காலம் 7.5 முதல் 8 மாதங்களாகும். ஒன்று முதல் மூன்று குட்டிகள் ஈனும்.



குட்டிகள் முயலின் உருவளவில் இருப்பதால் இறைவாரிப் பறவைகள் எளிதில் தூக்கிச் செல்லும். எனவே குட்டியைப் பாதுகாக்க அடர்ந்த புதர் மற்றும் பாறை இடுக்குகளில் மறைத்து வைக்கும். சிறுத்தைப்புலி, ஓநாய், செந்நாய், மற்றும் காட்டுப் பூனை போன்றவைகள் நாற் கொம்பு மானின் கொன்றுண்ணிகளாகும்.

ஒடிசா, மற்றும் தமிழ்நாட்டில் வாழ்கின்றன. இந்தியாவில் பெரும்பான்மையாக காணப்படுகின்றன. இதன் ஆயுள்காலம் பத்து ஆண்டுகளாகும். ஒடிசாவின் மாநில விலங்கு நாற்கொம்புமான் ஆகும்.

## கத்தூரி மான் (கஸ்தூரி மான்)



கஸ்தூரிமானினை நானமா என்று அழைப்பர். இதன் அறிவியல் பெயர் மொசுக்காசு. கஸ்தூரிமான் ஒன்றே மொசுக்காசு பேரினத்தில் இன்றும் உயிர் வாழ்கிறது. கஸ்தூரிமான் 80-100 செ.மீ நீளம், உயரம் 50-70 செ.மீ, எடை 7-17 கிலோ இருக்கும். கஸ்தூரிமான் சிவப்பும் பழுப்பும் கலந்த நிறத்தில் இருக்கும். மற்ற மான்களைப் போல கஸ்தூரி மான்களுக்குக் கொம்புகள் கிடையாது. ஏதேனும் ஆபத்து நேரிடும் போது தனது நீண்ட மேற்பற்களை ஆயுதமாகப் பயன்படுத்தும். இதன் உடல் முழுவதும் மயிர் காணப்படும். தலை சிறியதாக வலிமை குறைந்து காணப்படுகிறது. ஆனால் உடல் பெரியதாக இருக்கும். தாவிக் குதித்து ஓடுவதற்கு ஏதுவாக பின்னங்கால் முன்னங்கால்களை விட நீண்டதாகவுள்ளது. மலைப்பகுதி, பாறைகள் மற்றும் பனிப்படர்ந்த இடங்களில் வாழ்வதற்கேற்ப காலின் குளம்பு வலிமையாக உள்ளது. மின்னல் வேகத்தில் ஓடும். இனப்பெருக்கத்திற்காக ஆண்மான்கள் ஒருவிதமான சத்தம் எழுப்பியும் அல்லது நுகர்வின் மூலமாகவும் பெண்மானினை அழைக்கின்றன. கஸ்தூரிமானின் கருக்காலம் ஐந்து மாதமாகும். ஒன்று அல்லது இரண்டு குட்டிகளை ஈனும். குட்டிகள் நான்கு வாரங்களுக்குப் பிறகு நடக்கும்.

தனது குட்டியை ஓராண்டு காக்கும். ஆண்மான் தன் துணை மற்றும் குட்டியுடன் இணைந்து இருக்கும். பெண்மான் இரைதேடச் சென்றாலும், குறிப்பிட்ட நேரத்தில் வந்து தன் குட்டிக்குப் பால் கொடுத்து விட்டு மீண்டும் இரை தேடச் செல்லும். பிற மான்களைப் போல சமவெளியில் வாழ்வதில்லை. மலையில் பத்தாயிரம் அடி உயரத்தில் வாழ்கிறது.



கஸ்தூரிமானின் வயிற்றுப்பகுதியில் நான்கு உட்பிரிவுகள் உள்ளன. மற்ற மான்களிடம் இல்லாத பித்தப்பை கஸ்தூரி மானிடம் உள்ளது. இப்பையில் சுரக்கும் சுரப்பியே கஸ்தூரி என்பர். இச்சுரப்பி சுரக்கும் போது நீர் தன்மையில் இருக்கும். உலர்ந்தவுடன் சிறு சிறு மணல் போன்று மாறிவிடும். கஸ்தூரி ஐந்து வகையில் உள்ளது. அவை திலகை, கரிகை, பின்டகை, நாயகை, குளுந்தை ஆகியவையாகும். கஸ்தூரியினை மருந்துப் பொருளாகப் பயன்படுத்துகின்றனர்.

நரம்பு மண்டல பாதிப்பு, இரத்த ஓட்டக் குறைபாடு, அடிவயிற்று வலி, பாம்புக்கடி மற்றும் ஜன்னி போன்ற நோய்களைக் கஸ்தூரி குணப்படுத்துகிறது. சித்த மருத்துவத்தில் மருந்துப்பொருளாகப் பயன்படுகிறது. மேலும் கஸ்தூரியினை வாசனைத் திரவியமாகவும் பயன்படுத்துகிறார்கள்.

## நீர்மான்



நீர்மான் என்பது உருவத்தில் கஸ்தூரிமான் போன்று இருக்கும். ஆண்மான்களுக்குக் கொம்புகள் இல்லை. இதன் வாயின் பக்கவாட்டில் உள்ள கோரைப்பல் தான் மற்ற மானிடமிருந்து இம்மானினை வேறுபடுத்திக் காட்டுகிறது. இனச்சேர்க்கையின் போது மட்டுமே பெண் மானுடன் இருக்கும். பிற நேரங்களில் ஆண் மான்கள் தனி மந்தையாகத் திரியும்.

## புள்ளிமான்




புள்ளிமானின் உடல் முழுவதும் வெள்ளை நிறப்புள்ளிகளும், பழுப்பு நிறமாகவும், அடிப்பாகம் வெண்ணிறமாகவும் பார்க்கவே மிகவும் அழகாக இருக்கும். புள்ளி மானின் எடை 85 கிலோ. கொம்புகள் மூன்று கிளைகளாகப் பிரிந்திருக்கும். இரண்டரை அடி நீளம் வரை கொம்புகள் வளரும். இந்தியா, இலங்கை, வங்களாதேசம், மற்றும் பாகிஸ்தானில் சிறு அளவில் காணப்படுகிறது. இதன் வாழ் நாள் 8 - 14 ஆண்டுகளாகும். தெலுங்கானாவின் மாநில விலங்கு புள்ளி மான்.

## சருகுமான்



சருகுமான் (MOUSE DEER) மானினத்தில் சிறிய குளம்பு உடைய உயிரினம். மற்ற மான்களைப் போல கொம்புகள் கிடையாது. சைத்தூண் பழுப்பு நிறமாகவும், மேற்புறம் மஞ்சள் தூவியது போலவும், அடிப்புறம் வெண்மையாகவும் இருக்கும். ஆண் சருகுமானின் கோரைப்பல் தந்தம் போல இருக்கும். சருகுமானினை ஆசிய சருகுமான், ஆப்பிரிக்கா சருகுமான் என இருவகையாகப் பிரிக்கலாம்.



ஆசிய சருகுமான் 7-8 கிலோ. ஆப்பிரிக்கா சருகுமான் 7-16 கிலோ இருக்கும். ஆரம்பத்தில் சருகுமானில் நான்கு இனங்கள் மட்டுமே இருந்தது. தற்போது பத்து இனங்கள் உள்ளன. கேரளாவில் சருகுமானினை கூன் பன்றி என்று அழைப்பர். இதன் எடை நான்கு கிலோ. உயரம் 25-30 செ.மீ ஆகும். சருகுமான் இலையுதிர் மற்றும் பசுமைமாறாக் காடுகளில் மட்டும் காணப்படுகின்றன.

## நீலான் மான்

நீலான் மானை நீலான், நீலமான், நீலகை என்று அழைப்பர். இம்மான் பிறந்தவுடன் பழுப்பு நிறமாகவும், பத்து மாதத்திற்குப்பின் நீல நிறமாகவும், நான்கு ஆண்டுகளுக்குப்பின் நீலம் கலந்த சாம்பல் நிறமாகவும் இருக்கும். தன் வாழ்நாளில் மூன்று நிறம் மாறி விடுகிறது. ஆண்மானின் எடை 270 கிலோ, உயரம் 130-150 செ.மீ. கொம்பின் நீளம் 15-20 செ.மீ. இருக்கும். கொம்பு கூம்பு வடிவில் உறுதியற்று காணப்படுகின்றன. பெண்மானின் எடை 169 கிலோ. உயரம் 100-130 செ.மீ ஆகும். பெண் நீலான்களுக்கு முகம், காதுகள், காற்குழைச்சு (முழங்கால் மூட்டு) மற்றும் வால் ஆகிய இடங்களில் கறுப்பு மற்றும் வெள்ளை நிறக்குறிகள் இருக்கும். முகம் வெள்ளை நிறமாக இருக்கும். முகத்தில் உள்ள மயிர் முரடாகவுள்ளது. பெண் நீலானை விட ஆண் நீலானுக்கு கழுத்தின் பின் பகுதியில் அதிகமான கறுப்புநிற மயிர்கள் காணப்படுகிறது. இரண்டு முதல் பத்து உறுப்பினர்கள் கொண்ட குழுவாக வாழும்.



சூழ்நிலை மற்றும் காலநிலைக்கு ஏற்ப எண்ணிக்கை மாறும். மூன்று நிலையில் குழுக்கள் உள்ளன. முதல் நிலை இளங்கன்றுகளுடன் ஒன்று அல்லது இரண்டு பெண் நீலன்கள். இரண்டாம் நிலை ஒரு வயதான கன்றுடன் மூன்று முதல் ஆறு வளர்ந்த நீலன்கள். மூன்றாம் நிலை இரண்டு முதல் பதினெட்டு ஆண் நீலன்களைக் கொண்ட குழுக்களாகக் காணப்படுகின்றன. நீலன் மான் ஐந்து மாதம் கடந்தபோது ஒரு ஒலியை எழுப்பும். அவ்வொலி 500ச.மீ வரை கேட்கும். ஆண்மான் சண்டையிடும் போது முரட்டுத்



தனமான ஒலியை எழுப்பும். தாய்க்கும் கன்றுக்கும் இடையே மென்மையான ஒலி பரிமாற்றம் நடைபெறும். ஆபத்து வரும்போது 48 கி.மீ வேகத்தில் ஓடும். பகற் பொழுதில் 7 - 18 மணி நேரம் சுற்றித் திரியும். இரவைக் காட்டிலும் பகலில் உற்சாகமாக இருக்கும். திறந்த வெளிக்காடுகள் மற்றும் புதர்காடுகளில் வாழும். இனப்பெருக்கம் வாழ்விடத்துக்கு ஏற்ப மாறுபடும். விலங்கியல் பூங்காவில் வளரும் மானின் சூல்காலம் எட்டு அல்லது ஒன்பது மாதம். பெரும்பாலும் இரண்டு முதல் மூன்று குட்டிகளை ஈனும். பத்து மாதத்தில் பாலூட்டுவதை நிறுத்தி விடும். பதினெட்டு மாதத்தில் இனப்பெருக்கத்திற்குத் தயாராகிவிடும். நீலன் மானின் வாழ்நாள் இருபத்தொன்று ஆண்டுகளாகும்.

## குரைக்கும் மான்

நாய் குரைப்பது எல்லாருக்கும் தெரியும். ஆனால் மான் குரைக்குமா? குரைக்கும். குரைக்கும் மான் (BARKING DEER) என்பது கேளையடு மானினத்தைச் சார்ந்தது. அதன் பின்னங் காலை வெட்டியிழுத்து மெதுவாக நடந்து வரும் அழகே தனி.



உடல் செந்நிறமாக இருக்கும். கிளைத்த கொம்பினை உடையது. கொம்பு முனையில் வளைந்திருக்கும். பகலில் சுற்றித்திரியும். புல், இலை, தழை, பழங்களை உணவாக உண்ணுகின்றன. ஏப்ரல்- ஜூனில் கொம்பு உதிரும். முழுவளர்ச்சி அடைந்த கொம்பு 2 - 3 அங்குலம் உடையது. இனப்பெருக்க காலத்தில் மட்டுமே இணைந்திருக்கும். மற்ற நேரத்தில் தனித்தே இருக்கும்.

## சாய்காமான்



ஆண்ட்டிலோப் என்ற இனத்திலுள்ள சாய்கா மானுக்கு யானையின் (துதிக்கை) மூக்கினைப் போன்ற மூக்கு காணப்படுகின்றன. இம்மானின் உயரம் 2-3 செ.மீ. எடை 36 -63 கிலோ இருக்கும். பத்து வருடம் உயிர் வாழும்.

## வராகமான்



வராகமான் பன்றியைப் போல உடல் அமைப்பும், செயல்பாடும் கொண்டது. இது தலை தொங்கியவாறு ஓடும். தாவாது, குதிக்காது, ஊர்ந்து செல்லும். இம்மான் இந்தியா, பாகிஸ்தான், சீனா, நேபாளம் ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன.

## வெள்ளை இரலை மான்

வெள்ளை இரலை மானினை 'திருக்குக்கொம்பு' அல்லது 'அடாக்கசு' என்று அழைப்பர். இயற்கையாகவே இம்மான் கோடையில் வெண்ணிறமாகவும் குளிரில் பழுப்பு நிறமாகவும் தோன்றும். இம்மாற்றத்தின் மூலம் கொன்றுண்ணிகளிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ளும். கூட்டமாக வாழும். இக்கூட்டத்தில் 5-20 மான்கள் இருக்கும். நீண்ட கொம்புகளைக் கொண்டிருக்கும்.



முதிர்ந்த பெண்மானே வழி நடத்தும். தண்ணீர் இல்லாமல் வெகு நாள் வாழும். இம்மான்கள் புற்கள் மற்றும் பாலைவனத் தாவரங்களை உண்ணும். கடமான் வகையில் பெரியவற்றில் ஒன்று வெள்ளை இரலை மானாகும். பெரிய ஆண்மான் 280 கிலோ வரையிருக்கும். ஒட்டன்மான் என்பது கடமானின் உள்ளினமாகும். சகாராப் பாலைவனப் பகுதியில் காணப்படும் மானினத்தில் பெரியது என்றால் அது வெள்ளை இரலை மானாகும்.

இதுவரை காடு, மலை, சமவெளி மற்றும் பாலைவனத்திலும் மான்கள் வாழ்வதாகப் பார்த்தோம். ஆனால் சதுப்பு நிலத்திலும் மான்கள் வாழ்கின்றன.

## சதுப்பு நிலமான்



சதுப்பு நிலமான் அழகே! அதன் கிளைத்த கொம்பும், உரோமமும் தான். பொதுவாக அடர்பழுப்பு நிறத்தில் இருக்கும். கோடையில் நிறம் மங்கிவிடும். இனப்பெருக்கத்தின் போது மட்டும் பெண்மானுடன் இணைந்திருக்கும். மற்ற நேரங்களில் ஆண்மான்கள் தனி மந்தை அமைத்துக் கொள்ளும். உத்திரப் பிரதேசத்தின் மாநில விலங்கு சதுப்பு மான்.

## ஆப்பிரிக்கச் சிறுமான்

ஆப்பிரிக்கச் சிறுமான் இதனை இம்பாலா (Impala) என்றும் அழைப்பர். இம்மான் இரலை மானினத்தைச் சார்ந்தது. இம்பாலா என்ற பெயர் சூலு மொழியில் இருந்து பெறப்பட்டது. இம்பாலாமானின் உயரம் 75 செ. மீ. முதல் 95 செ. மீ ஆகும். ஆண்மான் 40 முதல் 80 கிலோ எடையும் பெண்மான் 30 முதல் 50 கிலோ எடையும் கொண்டது. இதன் கொம்புகள் 90 செ.மீ. நீளம் வரை வளரும். இம்பாலாமான் சிவந்த பழுப்பு நிறமும் வயிற்றுப் பகுதி வெண்மையாகவும் இருக்கும். இதன் பின்புறம் (வால் பகுதி) கறுப்பு நிறத்தில் பார்ப்பதற்கு ஆங்கில எழுத்து 'M' போன்று இருக்கும். இவ்வினத்தில் கறுப்புச் சிறுநவ்வி



மிகவும் அரியது. வறட்சியான காலங்களில் புல், இலை உள்ள நீர்சத்தினைக் கொண்டே சில வாரங்கள் வரை நீர் அருந்தாமல் இம்பாலா மானால் வாழ முடியும். இம்மான் மணிக்கு 90 கி. மீ. வேகத்தில் ஓடும். பத்து மீட்டர் நீளம், மூன்று மீட்டர் உயரம் வரை குதித்துத் தாவிச் செல்லும். இச்செயலின் மூலம் கொன்றுண்ணிகளைக் குழப்பமடையச் செய்து தன்னைக் காத்துக் கொள்கிறது. சிறுத்தை, சிங்கம், காட்டுநாய் முதலிய விலங்குகள் இதன் கொன்றுண்ணிகளாகும்.

## புல்வாய் மான்

புல்வாய் மானினை திருகுமான், வெளிமான், முருகுமான் என்று அழைப்பர். ஆண்புல்வாய் மானினை கலைமான் மற்றும் இரலை கருஞ்சிக் கிடாய் என்று கூறுவர். பெண்மானை விட ஆண்மான் உருவத்தில் பெரியது. இதன் எடை 34 முதல் 45 கிலோவும் பெண்மான் 31 முதல் 39 கிலோ எடையும் கொண்டது. பெண்மானும், கன்றுகளும் பழுப்பு நிறத்தில் இருக்கும். பருவமடைந்த ஆண் புல்வாய் மான் கறுப்பு நிறத்திலும் திருக்குக் கொம்பையும் (சுரிக் கொம்பு) கொண்டிருக்கும். புல்வாய் மான் ஐந்து மாதம் சூல் கொண்டு ஒரு குட்டியினை ஈனும். குட்டி ஈன்ற இரண்டு வாரங்களில் அடுத்த இனப்பெருக்கத்திற்குத் தயாராகி விடும். இதன் ஆயுட்காலம் பத்து அல்லது பன்னிரண்டு ஆண்டுகளாகும்.



இந்தியாவில் மட்டுமே இருநூறுக்கும் மேற்பட்ட மான் வகைகள் உண்டு. தமிழ்நாட்டில் பதினெட்டு வகையான மான்கள் உள்ளன. மான்கள் பொதுவாக அதன் கொம்பு, தோல், இறைச்சி இவைகளுக்காக வேட்டையாடப்படுகின்றன. இதனைத் தடுக்க இந்திய அரசு 1972 ஆம் ஆண்டு வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது. காடுகளை அழிப்பதையும், மானினை வேட்டையாடுவதை நிறுத்தினால் மானினத்தைக் காப்பாற்றலாம்.

***

வன விலங்குகளில் வனப்பு (அழகு)
மிகுந்த விலங்கு மான்.
பலநூற்றாண்டு கடந்து இன்றும்
தழைத்திருக்கும் விலங்குகளின் பட்டியலில்
மானுக்கு இடம் உண்டு என்பதை மறவாதீர்கள்!
வேகம் விவேகம் இரண்டையும்
இயல்பாய்க் கொண்ட மானின் வாழ்வியலை
அறிந்ததில் மகிழ்ச்சி தானே?

*இனி வலை பின்னி வீழ்த்தும் வஞ்சகனின்
வாழ்வை அறிவோம். யார் இவன் தெரிகிறதா?*

**அறிய வேண்டும் எனில் எனது அடுத்த
நூலைப் படியுங்கள்...**



மு. இராஜா., M.A.,B.Ed.,
[மொழி ஆய்வாளர்]
உடன் உலகத்தமிழ்க் கல்விக்கழக தமிழ் ஆசிரியர்கள்
மற்றும் வரைகலையாளர்கள்.

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்
www.worldtamilacademy.com www.tamilacademy.com